# விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

| **தொ. இல.** | **அறிவுறுத்தல்கள்** |
|---|---|
| 1.4.1 | விண்ணப்பதாரி அகில இலங்கைச் சேவைக்கு, இணைந்த சேவைக்கு அல்லது வேறு சேவைக்கு உட்பட்டவராயின் அச்சேவையைக் குறிப்பிடுக |
| 1.4.2 | விண்ணப்பதாரி உரிய சேவையில் வகுப்பிற்குட்பட்டவராயின் வகுப்பையும், அத்தரத்திற்கு உட்பட்டவராயின் அத்தரத்தையும் குறிப்பிடுக |
| 1.5 | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு/சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப, விண்ணப்பதாரி தற்போது வகிக்கும் பதவியைக் குறிப்பிடுக |
| 1.6 | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவை வகுதிகளுக்குள், விண்ணப்பதாரி உட்படும் சேவை வகுதியைக் குறிப்பிடுக |
| 1.6.1 | உரிய சேவை வகுதியில் விண்ணப்பதாரி எந்த தரத்திற்கு உட்பட்டவர் என்பதைக் குறிப்பிடுக |
| 2.1 | விண்ணப்பதாரி, நிவாரணம் கோருவது வினைத்திறன்காண் தடைதாண்டலுக்காகவா, மொழித் தேர்ச்சிக்காகவா, திணைக்களப் பரீட்சைக்காகவா அல்லது இம்மூன்று விடயங்களுக்குமா என்பதை குறிப்பிடப்பட்டுள்ள கூட்டில் √ அடையாளம் இட்டு காட்டுக |
| 2.2 | விண்ணப்பதாரி வினைத்திறன்காண் தடையிலிருந்து அல்லது மொழித் தேர்ச்சியிலிருந்து அல்லது திணைக்களப் பரீட்சையிலிருந்து விடுவிப்பு கோருகிறாரா அல்லது நிவாரண காலத்தை கோருகிறாரா என்பதை உரிய கூட்டில் √ அடையாளம் இட்டு காட்டுக |
| 2.3 | தொடர் இலக்கம் 2.1இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு, நிவாரணக் கோரிக்கைக்கான காரணங்களை உரிய கூட்டில் √ அடையாளம் இட்டு காட்டுக |
| 2.3.1 | குறிப்பிட்ட கால எல்லைக்குள் பரீட்சை நடைபெறாமை, குறிப்பிட்ட தடவைகள் பரீட்சை நடைபெறாமையினால் தகைமையைப் பூர்த்தி செய்ய முடியாமை, அதன் காரணமாக நிவாரண காலத்தை பெற்றுத் தருமாறு வேண்டப்படும் கோரிக்கைகளும் இதில் உள்ளடங்கும். இதற்காக, பின்வரும் ஆவணங்களை இணைத்து சமர்ப்பிக்கவும். |

- குறித்த பரீட்சை குறித்த காலத்திற்குள் நடைபெறாமை, மற்றும் அதற்கான காரணங்கள் பற்றிய விபரம்
- பின்வரும் பட்டியலுக்கமைய தேவையான விபரங்கள்

| உரிய பரீட்சையை நடாத்துவதற்கு குறிக்கபட்டிருந்த திகதி | பரீட்சை நடைபெற்ற திகதி | நடைபெற்ற பரீட்சைக்கு உத்தியோகத்தர் தோற்றினாரா என்பது பற்றி | சித்தி பெற்ற பாடம் | பரீட்சைக்கு தோற்றாவிடின் அதற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

2.3.2 சுகவீனம், பிரசவ விடுமுறை போன்ற, உத்தியோகத்தரால் தவிர்க்க முடியாத காரணங்களினால் பரீட்சைக்கு தோற்ற முடியாமல் போனமைக்கான வேண்டுகோள். இதுவிடயமாக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- குறித்த பரீட்சைக்கு தகைமை பெற்ற திகதி முதல் நிவாரணம் கோரும் திகதிவரை நடைபெற்ற பரீட்சைகளின் தடவைகள் மற்றும் அவற்றிற்கு உத்தியோகத்தர்கள் சமூகமளித்துள்ள தடவைகள் தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள ஒழுங்கின் பிரகாரம் தகவல்களைத் தருக

| பரீட்சை நடைபெற்ற திகதி | உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றினாரா என்பது பற்றி | சித்தி/ சித்தியின்மை தொடர்பாக | பரீட்சைக்கு தோற்ற முடியாமல் போனமைக்கான விசேட காரணங்கள் இருப்பின் அதுபற்றிய விபரங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

- பரீட்சைக்கு தோற்ற முடியாமைக்கான தனிப்பட்ட காரணங்களை உறுதி செய்யும் ஆவணம் (உ+ம்: வைத்திய அறிக்கை)

2.3.3 45வயது பூர்த்தியாகும் திகதி மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டலை அடையும் திகதி ஆகிய இரு திகதிகளையும் 2001.10.01க்கு முன்பே அடைந்துள்ள உத்தியோகத்தர்கள், அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 20/2001இன் கீழ் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறவேண்டிய தேவையிலிருந்தும் விலக்களிக்கப்படுவார். இதற்கான கோரிக்கையை இதன்கீழ் சமர்ப்பிக்க முடியும். இதற்காக இணைப்பு செய்ய வேண்டிய ஆவணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் உறுதி செய்யப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் ஒரு பிரதி

2.3.4 வினைத்திறன்காண் தடைதாண்டலுக்கு/மொழித் தேர்ச்சிக்கு / திணைக்களப் பரீட்சைக்கு உரித்தான தகைமைகளுக்கு சமனான, அதே மட்டத்தில் நடைபெற்ற வேறு தகைமைகளை பூர்த்தி செய்துள்ள சந்தர்ப்பத்தில் அதற்காக விண்ணப்பிக்கலாம்.
அப்பரீட்சைக்கு குறித்த பாடத்திற்கு பதிலாக வேறு தகைமை (உ-ம். சட்ட பாடத்திற்கு பதிலாக சட்டமாணி பட்டம்) இருந்தால் குறித்த பரீட்சையில் இருந்தும் விடுவிக்குமாறு கோரும் விண்ணப்பமும் இதில் உள்ளடங்கும். இதற்காக இணைத்து சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு.

- குறித்த பரீட்சைகளில்/தகைமைகளில் பாடத்திட்டத்துடன் விண்ணப்பதாரி சித்தியடைந்துள்ள பரீட்சைகளில்/பூர்த்தி செய்துள்ள தகைமைகளில் பாடத்திட்டம்/பாடநெறி உள்ளடக்கப்பட்டுள்ளதென்பதையும் குறித்த மட்டத்தில் உள்ளதெனவும் உரிய அதிகாரியின் மூலம் உறுதி செய்யப்பட்ட ஆவணம்
- விண்ணப்பதாரி சித்தியடைந்துள்ள பரீட்சையின் /பூர்த்தி செய்துள்ள தகைமையின் பாடத்திட்டம்
- சித்தியடைந்துள்ள பரீட்சையின் பெறுபேறுகளின் உறுதி செய்யப்பட்ட பிரதிகள் (உ+ம்: சட்ட பாடத்தில் விடுவிப்பதற்கு கோருவதாயின் சட்டமாணிப் பட்டப்பரீட்சை சான்றிதழ்)

2.3.5 மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்கு புறம்பாக வேறு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் விண்ணப்பம் இதில் உள்ளடங்கும். அவ்விடயத்தை கொடுக்கப்பட்டுள்ள இடைவெளியில் சுருக்கமாக குறிப்பிடுக. இது தொடர்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு.

- விண்ணப்பிக்கும் விடயத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

❖ குறிப்பு: இதற்கு மேலதிகமாக விண்ணப்பப்படிவத்தில் தொடரிலக்கம் 2.3.1 முதல் 2.3.5 வரையிலான சகல விண்ணப்பங்களுக்கும் பொதுவாக பின்வரும் ஆவணங்களை இணைத்து சமர்ப்பிக்கவும்.

- நிவாரணம் கோருவதற்கான காரணம் எதுவென்பது தொடர்பாக விண்ணப்பதாரியினால் எழுத்துமூலம் தெரிவக்கப்பட்டுள்ள விரிவான விளக்கம்

- நிவாரணம் கோரும் வினைத்திறன்காண் தடைதாண்டலுக்கு/மொழித் தேர்ச்சிக்கு/திணைக்களப் பரீட்சைக்கு உரித்தான பதவிக்கு/தரத்திற்கு நியமனம் செய்யப்பட்ட கடிதத்தின் உறுதி செய்யப்பட்ட பிரதி.

- பதவிக்கு உரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பின் உறுதி செய்யப்பட்ட பிரதி

(அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 06/2006க்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பு எனின், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உரிய இலக்கம் மற்றும் திகதியையும் குறிப்பிடுவதோடு அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அல்லது சேவை பிரமாணக் குறிப்பின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

3.1.1 நிவாரணம் கோருவது (III) (II) அல்லது (I) இல் உள்ள தடைதாண்டலுக்குள் எது என குறிப்பிடுக

3.1.2 வினைத்திறன்காண் தடைக்கு/திணைக்களப் பரீட்சைக்கு உரிய தரத்திற்கு/பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதியைக் குறிப்பிடுக

3.1.3 சேவை வகையின் உரிய தரத்திற்கு/பதவிக்கு உரிய சம்பள அளவிற்கு ஏற்ப நிவாரணம் கோரும் வினைத்திறன்காண் தடைதாண்டலை /திணைக்களப் பரீட்சையை அடைந்த திகதியைக் குறிப்பிடுக.

3.1.4 வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை/திணைக்களப் பரீட்சையை சித்தியடைந்ததன் பின்னர், நிவாரணம் கோருவதாயின், சித்திபெற்ற திகதியைக் குறிப்பிடுக.

3.1.5 (அ) பிரச்சினைக்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டலுக்காக /திணைக்களப் பரீட்சைக்காக இதற்கு முன்னர் நிவாரண காலம் பெற்றுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக.

(ஆ) மேலே கூறியவாறு இதற்கு முன்னர் நிவாரண காலம் பெற்றிருந்தால் அக்கால எல்லையையும் சகல திகதிகளையும் ஒழுங்கு பிரகாரம் குறிப்பிடுக.

3.1.6 விண்ணப்பதாரி நிவாரணம் கோரும் கால எல்லையை/காலப்பகுதியை திகதிகள் சகிதம் குறிப்பிடுக. தொடரிலக்கம் 2.2 இன் கீழ் விடுவிப்பதற்கான கோரிக்கைக்கு இது உரித்தாகமாட்டாது.

3.1.7 நிவாரணம் கோரும் வினைத்திறன்காண் தடை தாண்டலுக்கு/திணைக்களப் பரீட்சைக்குரிய பதவிக்கு விண்ணப்பதாரி நியமிக்கப்பட்ட/பதவி உயர்வு பெற்ற திகதியும் அத்தினத்திலிருந்து வினைத்திறன்காண்

தடைதாண்டல்/திணைக்களப் பரீட்சையை சித்தியெய்திய தினம் வரையிலான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள்/திணைக்களப் பரீட்சைகள் நடாத்தப்பட்ட சகல தினங்களும் அப்பரீட்சைகளுக்கு அலுவலர் விண்ணப்பித்தார், தோற்றினார் மற்றும் சித்தியெய்தினார் என்பதுபற்றிய தகவல்களும் பரீட்சைக்கு தோற்றவில்லை எனின் அதற்கான காரணங்களையும் சுருக்கமாகக் குறிப்பிடவும்.

3.2.3 மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்ததன் பின்னர், நிவாரணம் கோருவதாயின் உரிய தகைமையைப் பூர்த்தி செய்த திகதியைக் குறிப்பிடுக.

3.2.4 (அ) பிரச்சினைக்குரிய மொழித்தேர்ச்சிக்காக இதற்கு முன்னர் நிவாரண காலத்தை பெற்றிருந்தீரா என்பதைக் குறிப்பிடுக.

(ஆ) மேலே கூறியவாறு இதற்கு முன்னர் நிவாரண காலம் பெற்றிருந்தால் அக்கால எல்லையையும் சகல திகதிகளையும் ஒழுங்கு பிரகாரம் குறிப்பிடுக.

3.2.5 விண்ணப்பதாரி நிவாரணம் கோரும் கால எல்லையை/காலப்பகுதியை திகதிகள் சகிதம் குறிப்பிடுக. தொடரிலக்கம் 2.2 இன் கீழ் விடுவிப்பதற்கான கோரிக்கைக்கு இது உரித்தாக மாட்டாது.

5. விண்ணப்பதாரி வகிக்கும் பதவிக்கு உரித்தான திணைக்களத் தலைவரது அல்லது நிறுவனத் தலைவரது சிபாரிசினை குறிப்பிடுக.

6. விண்ணப்பதாரி சேவையாற்றும் திணைக்களம் உள்ளடங்கும் நிரல் அமைச்சு செயலாளரின் சிபாரிசினைக் குறிப்பிடுக

7. விண்ணப்பதாரி அனைத்து இலங்கை சேவைக்கு உட்பட்டவராயின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிருவாக அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள நிருவாக அதிகாரியின் சிபாரிசையும், இணைந்த சேவைக்கு உட்படுவாராயின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசையும் குறிப்பிடுக.

❖ குறிப்பு

I திணைக்களத் தலைவர் நியமன அதிகாரியாகவுள்ள பதவிக்காக தொடரிலக்கம் 5இன் சிபாரிசு மாத்திரம் போதுமானது என்பதோடு தொடரிலக்கம் 6 மற்றும் 7க்கான சிபாரிசுகள் அவசியமில்லை.

II இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் நியமன அதிகாரியாகவுள்ள பதவிக்கு தொடரிலக்கம் 6இன் சிபாரிசு அத்தியாவசியமில்லை

III. அமைச்சு செயலாளர் நியமன அதிகாரியாகவுள்ள பதவிக்கு தொடரிலக்கம் 5 மற்றும் 6இன் சிபாரிசுகள் போதுமான தென்பதோடு தொடரிலக்கம் 7இன் சிபாரிசு அவசியமில்லை.

❖ விண்ணப்பதாரிகள் குழுவாக பொதுக் கோரிக்கைக்கு தொடரிலக்கம் 1 மற்றும் 4ஐ தவிர்த்து விண்ணப்பப்படிவத்தின் எஞ்சிய பகுதியை பூரணப்படுத்துக. தொடரிலக்கம் 1 மற்றும் 4க்கு உரித்தான விண்ணப்பதாரர்கள் தொடர்பான தகவல்களை வேறு இணைப்பாக சமர்ப்பிக்கவும்.

❖ குறிப்பிட்ட சேவைக்கு அல்லது பதவிக்கு உரித்தான பொதுவான பிரச்சினைகளுக்கு உட்பட்ட உத்தியோகத்தர் குழுவுக்கே இவ்வாறான பொதுவான கோரிக்கையை சமர்ப்பிக்க முடியும்.